DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
---
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, YERCAUD
DATE : 21.08.2025.

| | | |
|---|---|---|
| Case No. | : | CC. No.29/2024 |
| Deposition of Witness for Prosecution | : | PW.1 |
| Name | : | **பத்மினி** |
| Husband Name | : | **ரவி** |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | xxxx |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Deposition of witness for prosecution side solemnly affirmed by Tr. P. Maruthachalam, Junior Assistant of this court, on 21.08.2025 in accordance with the provisions of Act 1 of 1873.

**(எதிரி ஆஜர்.)**

**<u>முதல் விசாரணை:-</u>**

நான் தற்போது சேலம் மாவட்டம், ராமகிருஷ்ண சாலையில் குடியிருந்து நாகலூாரிலுள்ள எஸ்டேட்டை பராமரித்துகொண்டுள்ளேன். ஆஜர் எதிரியை தெரியும். கடந்த 08.06.2024-ம் தேதியன்று எனக்கு சொந்தமான நாகலூாரிலுள்ள மூங்கில் கொத்து எஸ்டேட்டிலுள்ள பங்களாவில் கதவை உடைத்து உள்ளே வைத்திருந்த பூஜை சாமான்கள், கட்ட வேலை செய்யும் பொருட்கள் திருடு போயிருந்தது அது சம்மந்தமாக போலீசாரிடம் புகார் கொடுத்தேன். போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை செய்தார்கள். அதன் பின்பு 11.08.2024-ம் தேதி எனது எஸ்டேட்டில் வேலை பார்க்கும் ஜோதி என்பவர் போன் செய்து எங்கள் எஸ்டேட்டில் ஆஜர் எதிரி நுழைந்து எதோ பொருளை தேடிக்கொண்டுயிருப்பதாகவும், அவரிடம் எதற்காக உள்ளே வந்து என்ன செய்துகொண்டிருக்கிறார் என்று கேட்டதற்கு அவருடைய செல்போன் தொலைந்துவிட்டது என்று ஜோதியிடம் சொன்னதாகவும் என்னிடம் ஜோதி சொன்னார். ஜோதி மற்றும் அஜித்குமார், தேவராஜ் ஆகிய மூவரும் தமிழரசனை விசாரித்தபோது எங்கள் எஸ்டேட்டில் மண்வெட்டி, கடப்பாறை, கட்ட வேலை

செய்யும் பொருட்கள், காணாமல் போயிருந்தது. மேற்படி பொருட்களை ஆஜர் எதிரி எடுத்துச்சென்றதாக ஜோதி என்னிடம் சொன்னார்.

12.08.2024–ம் தேதி ஏற்காடு காவல் நிலைய உதவி ஆய்வாளர் எஸ்டேட்டிற்கு வந்து விசாரணை செய்தார். அப்போது நானும் உடனிருந்தேன். உதவி ஆய்வாளர் எஸ்டேட்டிற்கு அருகே இருக்கும் ஆஜர் எதிரியின் வீட்டிற்கு சென்று பார்க்கும்போது எங்களுக்கு சொந்தமான மண்வெட்டி மற்றும் காணாமல் போன பொருட்கள் அவரது வீட்டில் இருந்ததை அங்கிருந்து கைப்பற்றி எங்கள் எஸ்டேட்டிற்கு கொண்டுவந்தார். அதன்பின்பு அந்த பொருட்களை ஆஜர் எதிரியுடன் காவல் நிலையம் எடுத்துச்சென்றார். நான் இதுசம்மந்தமாக ஏற்காடு காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்தது தான். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான். **அந்த புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் பொருட்கள் தான் எனது எஸ்டேட்டில் காணாமல் போன பொருட்களாகும். **கைப்பிடி இல்லாத இரும்பு பகுதி மட்டும் உள்ள மண்வெட்டி இரண்டு எண்ணிக்கை அ.சா.பொ.1 ஆகவும், இரும்பு கடப்பாறை நான்கு எண்ணிக்கை அ.சா.பொ.2 ஆகவும், இரும்பு பாண்ட் நான்கு எண்ணிக்கை அ.சா.பொ.3 ஆகவும், அலுமினிய பாத்திரம் பெரியது ஒன்று அ.சா.பொ.4 ஆகவும், அலுமினிய பாத்திரம் சிறியது ஒன்று அ.சா.பொ.5 ஆகவும், அலுமினிய கரண்டி ஒன்று அ.சா.பொ.6 ஆகவும், பிளாஸ்டிக் துண்டு பைப்புகள் மூன்று எண்ணிக்கை அ.சா.பொ.7 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது**. போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

<u>எதிரியின் தரப்பில் குறுக்கு விசாரணை:–</u>

வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

Taken down by me in open court in the presence of the Accused. Read over to the witness and admitted by him/her to be correct.

Sd/-.R. Elanchezhian,
District Munsif-cum-Judicial Magistrate,
Yercaud.